இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டம்

---

[1993, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1993, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 2.40 தபாற் செலவு : ரூபா 1.65

## 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டம்.

[1993, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 54/91

புகையிரதம் மூலம் பயணிகளையும் பொருட்களையும் ஏற்றியிறக்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கென இலங்கைப் புகையிரத அதிகாரசபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; புகையிரதத் திணைக்களத்தின் சொத்துக்கள், உரிமைகள், பொறுப்புக்கள் ஆகிய எல்லாவற்றையும் இலங்கைப் புகையிரத அதிகாரசபைக்குக் கைமாற்றுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தையும் (200 ஆம் அத்தியாயமான) புகையிரதக் கட்டளைச்சட்டத்தையும் திருத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகள் தொடர்பில் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம் என்பதுடன், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் "நியமிக்கப்பட்ட தேதி" என்ற குறிப்பீடு ஆனது, இவ்வேற்பாடு நடைமுறைக்கு வருவதற்கென அப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தேதியைப் பற்றிய குறிப்பீடு ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும். — சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

### பாகம் I

### இலங்கைப் புகையிரத அதிகாரசபை தாபிக்கப்படுதலும் தத்துவங்களும் பணிகளும்.

2. (1) (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "புகையிரத அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் புகையிரத அதிகாரசபை என அழைக்கப்பட வேண்டியதான அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். — இலங்கைப் புகையிரத அதிகாரசபை.

(2) புகையிரத அதிகாரசபையானது, ஓராம் உட்பிரிவின் மூலம் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட பெயரில் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாதல் வேண்டுமென்பதுடன் பொது இலச்சினை ஒன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

2—டீ 027834—1,545 (94/02)

புகையிரத அதிகார சபையினது பணிப்பாளர்கள் சபையின் அமைப்பு.

3. (1) புகையிரத அதிகாரசபையினது அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் பின்வருவோரைக் கொண்டமைந்த பணிப்பாளர்கள் சபையொன்றிடம் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) உரித்தாக்கப்படல் வேண்டும் :—

(அ) ஏற்றியிறக்கலுக்கு அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தொடர்புடைய பாரிய அளவிலான வர்த்தக, தொழில் முயற்சிகளின் முகாமைத்துவத்தில் பரந்த அனுபவம் கொண்ட ஆளொருவராக இருக்கவேண்டியவரும் அமைச்சரால் நியமிக்கப்படுபவருமான தவிசாளர் ஒருவர்;

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படுபவரான, அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதி ஒருவர்;

(இ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரான பொது திறைசேரியின் பிரதிநிதி ஒருவர்;

(ஈ) முகாமைத்துவப் பணிப்பாளர்;

(உ) ஏற்றியிறக்கல், நிதி, சந்தைப்படுத்தல், சட்டம் அல்லது பொறியியல் சார்ந்த துறைகளில் அனுபவம் உடையவர்களும் தகைமையைக் காட்டியுள்ளவர்களுமான ஆட்கள் மத்தியிலிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படுபவர்களான வேறு மூன்று உறுப்பினர்கள்.

(2) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள், சபையின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் நியமனம், பதவிக்காலம் அத்துடன் சபையின் கூட்டங்கள் தொடர்பில் பயனுடையதாகவிருத்தல் வேண்டும்.

புகையிரத அதிகார சபையினது பிரதான பணி.

4. புகையிரத அதிகாரசபையினது பிரதான பணியானது பொருட்களையும் ஆட்களையும் திறமையாகவும், போட்டியாகவும், இலாபகரமாகவும் கொண்டுசெல்வதற்காக இலங்கையில் புகையிரத சேவைகளை ஏற்பாடு செய்வதற்கும், நடத்துவதற்கும் ஆனதாகவிருத்தல் வேண்டும்.

புகையிரத அதிகார சபையின் வேறு பணிகள்.

5. நான்காம் பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, புகையிரத அதிகாரசபையின் வேறு பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) புகையிரதம் மூலம் பொருட்களையும் ஆட்களையும் கொண்டுசெல்வதற்கான சேவைகளை, அத்தகைய சேவைகளை ஏற்பாடுசெய்வதில் புகையிரத அதிகாரசபையின் முதலீட்டை கடன்நீர் நிதிமூலமாகக் கடன் குறைத்தலையும் அத்துடன் அத்தகைய சேவைகளை ஏற்பாடுசெய்வதில் புகையிரத அதிகாரசபையினால் செய்யப்பட்ட முதலீட்டின் மீது நேர்தான ஆதாயமொன்றையும் உறுதிப்படுத்தும் கட்டணத்தில் ஏற்பாடுசெய்தல்;

(ஆ) பொருத்தமான கட்டணக் கொள்கையொன்றைப் பின்பற்றுவதன் மூலம், தேசத்துக்கு மிகவும் நன்மைதரக்கூடிய முறையில் பொருட்களும் ஆட்களும் கொண்டுசெல்லப்பட வேண்டுமென்ற தேசியக் குறிக்கோளை மேம்படுத்துதல்;

(இ) வீதி—புகையிரத ஒருங்கிணைப்பையும் துறைமுக—புகையிரத ஒருங்கிணைப்பையும், அத்தகைய ஒருங்கிணைப்பு தேசிய நலனுக்கு அவசியமெனக் கருதப்படுமிடத்து, மேம்படுத்துதல்;

(ஈ) புகையிரத அதிகாரசபையிடம் உரித்தாக்கப்பட்ட அசைவற்ற ஆதனம் முழுவதையும் திறமையாக முகாமை செய்தல், அத்துடன் அதன் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகப்படாததான அத்தகைய ஆதனத்தை அரசாங்கத்திடம் கையளித்தலும்.

6. புகையிரத அதிகாரசபை அதன் பணிகளைப் புரிகின்ற நோக்கத்துக்காக, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :— **புகையிரத அதிகார சபையின் தத்துவங்களும் கடமைகளும்**

(அ) வேறு முறையிலான போக்குவரத்துகளினால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகளுடன் புகையிரத அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகளின் போட்டித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கென, நேர்தானதாக இருக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் புகையிரதம் மூலம் பொருட்களையும், ஆட்களையும் அதிகாரசபை கொண்டுசெல்வதற்காகக் கட்டணங்களையும், வீதங்களையும், நடவடிக்கை முறைகளையும் நிர்ணயிப்பதற்கு;

(ஆ) பந்தி (அ) வின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதனால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுக்கும் வீதங்களுக்கும் குறைவான வீதத்தில் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, மாகாண சபைக்கு அதனால் வழங்கப்படும் ஏதேனும் சேவைகளுக்காக அரசாங்கத்துடன் பகிரங்க சேவைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களைச் செய்வதற்கு;

(இ) புகையிரத அதிகாரசபையின் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக்கமர்த்துவதற்கும்; அத்துடன் அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் ஊழியர்கோப்பு, அவர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியம், அவர்களுக்கு ஏற்புடைத்தான நியதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கும்;

(ஈ) அதன் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்வதற்கு;

(உ) அதன் வர்த்தகக் குறிக்கோள்களை எய்துவதற்கேற்ப வடிவமைக்கப்பட்ட பொருத்தமானதொரு புகையிரத செலவியல் முறைமையொன்றை தயாரிப்பதற்கு; இச்செலவியல் முறைமையானது, தனிப்பட்ட பாதைகள், சரக்குகள் மற்றும் அசைவுகள் என்ப

வற்றிற்கென நிலையான செலவுகள், வேறுபட்ட செலவுகள், நீண்டதூரம் மற்றும் குறைந்த தூரத்துக்கான எல்லைச்செலவு, அத்துடன் வேறு தோதான செலவுக் கோட்பாடுகள் உட்பட புகையிரத அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்படும் புகையிரத சேவைகளுக்கான முழுச்செலவையும் இயலுமானவரையில் சுட்டிக்காட்டுதல் வேண்டும்;

(ஊ) புகையிரத அதிகாரசபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அவர்களது நியமனம், பதவி உயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, விடுதலை, விடுமுறை, கடன்கள் மற்றும் முற்பண வழங்கல் தொடர்பான விதிகளை ஆக்குவதற்கு;

(எ) புகையிரத அதிகாரசபையினது அலுவல்களின் நிருவாகம் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கும் நடவடிக்கைமுறைகளை விதித்துரைப்பதற்கும்;

(ஏ) காப்பு நியமங்கள் உட்பட புகையிரத சேவைகளுக்கான நியமங்களை விதித்துரைப்பதற்கு;

(ஐ) புகையிரத அதிகாரசபையின் பணிகளைத் திறமையாகப் புரிவதற்காக கையளித்தல் அவசியமென சபை கருதக்கூடியவாறான அத்தகைய பணிகள் எவற்றையேனும், புகையிரத அதிகாரசபையின் தவிசாளருக்கு அல்லது எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்குக் கையளிப்பதற்கு;

(ஒ) புகையிரத அதிகாரசபையினால் ஊழியத்திற்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காக காப்புறுதி முறைமையொன்றையும், சகாய நிதியமொன்றையும், நல்வாழ்வு நிதியமொன்றையும் தாபிப்பதுடன் நல்வாழ்வு, சுகாதாரம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளையும் ஏற்பாடுசெய்வதற்கு;

(ஓ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் ஏதேனையும் கொள்ளுவதற்கு, வைத்திருப்பதற்கு, எடுப்பதற்கு அல்லது குத்தகை மீது கொடுப்பதற்கு, வாடகைக்கு விடுவதற்கு, ஈடுவைப்பதற்கு, விற்பதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கு;

(ஔ) புகையிரத அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் ஆட்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான வசதிகள் புகையிரத அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்படுவதும் அவ்வாறு ஏற்பாடு செய்வதற்கு ஏனையோருக்கு உதவி செய்தலும் உள்ளிட்ட, புகையிரத அதிகாரசபையினால் வேலைக்கமர்த்தப்பட்ட அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் திறமையை விருத்தி செய்யும் மற்றும் தேர்ச்சியை முன்னேற்றும் அல்லது புகையிரத அதிகாரசபையின் சாதனங்களின் அல்லது அத்தகைய சாதனங்கள் இயக்கப்படும் முறையின் திறமையை விருத்தி செய்யும் நோக்கத்துக்காக எதனையும் செய்வதற்கு.

**புகையிரத அதிகார சபை தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.**

7. (1) அமைச்சரானவர், தேசிய நலனைப் பாதிக்குமென அவருக்குத் தோன்றுவதான கருமங்களின் மீது, இச்சட்டத்தின்கீழ், புகையிரத அதிகாரசபையானது அதன் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றிய அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை புகையிரத அதிகார சபைக்கு எழுத்தில் வழங்கலாம் என்பதுடன் புகையிரத அதிகாரசபையானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், புகையிரத அதிகாரசபையின் சொத்துக்கள், நடவடிக்கைகள் தொடர்பில் விவரத்திரட்டுகளையும், கணக்கீடுகளையும் வேறு தகவலையும் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய விதத்தில் தம்மிடம் கொடுத்துதவும்படி காலத்துக்குகாலம் தேவைப்படுத்தலாம் என்பதுடன், புகையிரத அதிகாரசபையானது அத்தகைய பணிப்புகள் ஒவ்வொன்றையும் கொண்டுநடாத்துதலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர், அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் புகையிரத அதிகார சபையின் எல்லா நடவடிக்கைகளும் அல்லது அவற்றில் எதுவும் புலனாய்வு செய்யப்பட்டு அது பற்றி அறிக்கை செய்யப்பட வேண்டும் என காலத்துக்குக்காலம் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்படுவதன்மீது புகையிரத அதிகாரசபை அத்தகைய கட்டளையைப் பயனுறுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்தலும் அத்தகைய எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

**தவிசாளருக்கு தத்துவங்களைக் கையளித்தலும் தத்துவங்கள் தவிசாளரால் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கையளிக்கப்படுதலும்.**

8. (1) சபையானது இவ்வுட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவங்களைத் தவிர, அதன் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளுள் எவற்றையும் எழுத்துமூலமாக தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(2) தவிசாளர் புகையிரத அதிகாரசபையின் பிரதம கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(3) தவிசாளர், சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை புகையிரத அதிகார சபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம்.

## பாகம் II

### புகையிரத அதிகாரசபையின் பணியாட்டொகுதி.

**முகாமைப் பணிப்பாளர்.**

9. (1) சபையானது, தகுதியும் அனுபவமும் வாய்ந்த ஆளொருவரை புகையிரத அதிகார சபையின் முகாமைப் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும்.

(2) முகாமைப் பணிப்பாளர், கொள்கை சம்பந்தப்பட்ட விடயங்கள் மீதான சபையின் பொதுப் பணிப்புரைக்கும் தவிசாளரின் விசேட பணிப்புரைகளுக்கும் அமைய, புகையிரத அதிகாரசபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன் புகையிரத அதிகார சபையின் அலுவலர்கள் மீதும் சேவையாளர்கள் மீதும் நிர்வாகக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(3) முகாமைப் பணிப்பாளர், சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன் காலத்துக்குக்காலம் அவசியமானதென அவர் கருதக்கூடிய வாறான அவரது தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் அத்தகையனவற்றை புகையிரத அதிகாரசபையின் வேறு எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எழுத்துமூலம் கையளிக்கலாம் என்பதுடன் எந்த அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அத்தகைய ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுகின்றதோ அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், முகாமைப் பணிப்பாளரின் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கமைய, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும்.

(4) முகாமைப் பணிப்பாளர் அவரது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, அவரது இடத்திற் பதிற் கடமை யாற்றுவதற்கென வேறோர் ஆள் சபையால் நியமிக்கப்படலாம்.

பிரதம நிதி முகாமையாளர்.

10. (1) சபையானது, தகைமைபெற்ற, தகுதி வாய்ந்த ஆளொருவரை புகையிரத அதிகார சபையின் பிரதம நிதி முகாமையாளராக நியமித்தல் வேண்டும்.

(2) இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சிய தொகைகளின் செலவினத்தை ஈடுபடுத்தும் நிதியியல் தன்மையதான எல்லா முடிவுகளும், செலவினத்தின் நிதிசார்ந்த எல்லாச் சிக்கல்களையும் எடுத்துக்காட்டும் நிதி சார்ந்த பகுப்பாய்வொன்றை பிரதம நிதி முகாமையாளர் சமர்ப்பித்தபின்னர் மட்டுமே, சபையால் எடுக்கப்படுதல் வேண்டும்.

புகையிரதத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர்களால் நியமித்த தேதிக்கு முன்னர் கொடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல்.

11. புகையிரத திணைக்களத்தின் பகிரங்க அலுவலர்கள் புகையிரத அதிகார சபையில் தொழிலுக்கமர்த்தப்படுதல் தொடர்பில் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) (இலங்கைப் பொறியியல் சேவையிலுள்ள அலுவலர் ஒருவரைத் தவிர்ந்த) அரசாங்கத்தின் இடம் மாற்றப்படற்பாலதான சேவையொன்றில் எவரேனும் அலுவலராயிராத புகையிரத திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும் நியமித்த தேதிக்கு முன்னர், அத்தகைய அலுவலர் நியமித்த தேதியன்று—

(i) புகையிரத திணைக்களத்தின் பகிரங்க அலுவலரொருவராக தொடர்ந்து பதவியிலிருப்பதற்கு; அல்லது

(ii) புகையிரதத் திணைக்களத்தின் ஓய்வூதியம் பெறப்படற்பாலதான அலுவலரொருவராக அத்தேதியன்று பத்தாண்டுகளுக்குக் குறையாத ஓய்வூதியத்துக்குரித்துடையதான சேவையை உடையவராக இருந்திருப்பின், பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்று புகையிரத அதிகார சபையின் அலுவலரொருவராக வருவதற்கு; அல்லது

(iii) புகையிரதத் திணைக்களத்தின் ஓய்வூதியம் பெறப்படற்பாலதான அலுவலரொருவராக அத்தேதியன்று பத்தாண்டுகளுக்குக் குறைவான ஓய்வூதியத்துக்குரித்துடையதான சேவையை உடையவராக இருந்திருப்பின், பகிரங்க சேவையை விட்டு நீங்கி புகையிரத அதிகார சபையின் அலுவலரொருவராக வருவதற்கு; அல்லது

(iv) அவர் பகிரங்க சேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பின், பகிரங்க சேவையை விட்டு நீங்கி புகையிரத அதிகார சபையின் அலுவலரொருவராக வருவதற்கு; அல்லது

(v) பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்று அல்லது அதனை விட்டு நீங்கி புகையிரத அதிகார சபையின் அலுவலரொருவராக வருவதற்கு,

முன்னுகின்றுரென புகையிரதப் பகுதியின் பொதுமுகாமையாளருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) புகையிரதப் பகுதியின் பகிரங்க அலுவலர் ஒருவரால் (அ) என்னும் பந்தியின்கீழ், நியமித்த தேதிக்கு முன்னர் புகையிரதப் பகுதியின் பொது முகாமையாளருக்குக் கொடுக்கப்படும் அறிவித்தலொன்று இறுதியானதாதல் வேண்டும்.

12. (1) நியமித்த தேதிக்கு முன்னர் 11 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம், (iii) ஆம், (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பந்திகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலைக் கொடுக்காத அல்லது அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் கீழ் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கின்ற புகையிரதத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் எவரும் அத்தேதியன்றும் அதற்குப் பின்னரும் புகையிரதத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலரொருவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். 11 (அ) என்னும் பிரிவின் கீழ் அறிவித்தல் கொடுக்கப்படாமையின் அல்லது அறிவித்தல் கொடுக்கப்படுவதன் பலன்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்க அலுவலரொருவர், அத்தகைய பதவியில் அவர் தொடர்ந்திருக்கும்வரை, அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் புகையிரத அதிகார சபைக்காகவும் அதன் சார்பிலும் வேலை செய்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் புகையிரதத் திணைக்களத்தில் வேலை செய்யும் போது எந்த சேவை நிபந்தனைகளுக்கு உரித்துடையவராக இருந்தாரோ அதே சேவை நிபந்தனைகளுக்குத் தகுதியுடையவராதலும் வேண்டும். அத்துடன் வேறு எவரேனும் பகிரங்க அலுவலர் போன்று அத்தகைய ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதலும் வேண்டும்.

(3) புகையிரதத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் எவரும் அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் புகையிரத அதிகார சபைக்காகவும் அதன் சார்பிலும் வேலை செய்பவராக நியமித்த தேதியன்றும் அதன் பின்னரும் அத்தகைய அலுவலராகப் பதவியில் தொடர்ந்திருக்கின்றவிடத்து, அத்தகைய அலுவலர் தொடர்பில் அரசாங்கத்தால் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியம் அல்லது சகாய நிதிய உதவுதொகைகள் உட்பட சம்பளத்தையும் வேறு செலவுகளையும் உள்ளடக்குவதற்குப் போதியதாக நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நிர்ணயிக்கக்

கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சாத அத்தகைய பணத் தொகையை திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுவதற்கென புகையிரத அதிகார சபையானது திறைசேரியின் பிரதிச் செயலாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

*11 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) முதல் (v) வரையிலான உட்பந்திகளின் கீழ் கொடுக்கப்படும் அறிவித்தல் ஒன்றின் பயன்.*

13. (1) நியமித்த தேதிக்கு முன்னர் 11 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் அல்லது (iii) ஆம் அல்லது (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பந்தியின்கீழ் அறிவித்தல் கொடுக்கும் புகையிரத திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் எவரும்—

(அ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்து, நியமித்த தேதியிலிருந்தும் அதன் பின்னரும் புகையிரத அதிகாரசபையின் அலுவலரொருவராதல் வேண்டும் என்பதுடன், 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நியமித்த தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் காரணமாக அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருப்பாராயின் அவருக்கு ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின் கீழ் அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய ஓய்வூதியமொன்றுக்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்து, நியமித்த தேதியிலிருந்தும் அதன் பின்னரும் புகையிரத அதிகாரசபையின் அலுவலரொருவராதல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நியமித்த தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் காரணமாக அவர் பகிரங்க சேவையை விட்டு விலகியிருந்தால் ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய அளிப்பொன்றுக்கு தகுதியுடைவராதலும் வேண்டும்;

(இ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்து, நியமித்த தேதியிலிருந்தும் அதன் பின்னரும் புகையிரத அதிகார சபையின் அலுவலரொருவராதல் வேண்டும் என்பதுடன் பகிரங்க சேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு நியமித்த தேதியன்று பதவியிலிருந்து விலக்கப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தமொன்றின் முடிவுறுத்தலின்மீது அரசாங்க சேவையை விட்டு விலகியுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்; அல்லது

(ஈ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (v) ஆம் உட்பந்தியின் கீழ் அவரால் கொடுக்கப்படுமிடத்தும் அத்துடன் —

(i) அவர் அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்படும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராக இருப்பின் நியமித்த தேதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், நியமித்த தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் காரணமாக அவர் பகிரங்க சேவையிலிருந்து விலகியிருந்தால் ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய ஓய்வூதியத்திற்குத் தகுதியுடைவராதலும் வேண்டும்;

(ii) அவர் அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராக இருப்பின், நியமித்த தேதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், நியமித்த தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் காரணமாக அவர் பதவியை விட்டு விலகியிருப்பின் ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய அளிப்பொன்றுக்கு அவர் தகுதியுடையவராதலும் வேண்டும்;

(iii) அவர் அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராக இருப்பின், பகிரங்க சேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமித்த தேதியன்று பதவியிலிருந்து விலக்கப்படுதலின் மூலமாக அல்லாது வேறுவகையில் அரசாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தமொன்று முடிவுறுத்தப்படுவதன் மீது அரசாங்க சேவையை விட்டு விலகியிருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில், அந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய முரண்பாட்டின் அல்லது ஒவ்வாமையின் அளவுக்கு அத்தகைய வேறு ஏற்பாடுகளின்மீது மேலோங்கி நிற்றல் வேண்டும்.

புகையிரத அதிகார சபையின் நியமித்த சில அலுவலர் களுக்கு ஏற் புடைத்தான சிறப்பு ஏற்பாடுகள்.

14. பதின்மூன்றும் பிரிவின் ஏற்பாடுகளின் செயற்பாடு காரணமாக நியமித்த தேதியன்று புகையிரத அதிகார சபையின் அலுவலரொருவ ராக எந்த அலுவலர் ஆனுரோ, அவ் அலுவலருக்கும் அவர் தொடர் பிலும் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) அத்தகைய அலுவலர் அத்தகைய அலுவலரினுலும் புகையிரத அதிகார சபையினுலும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறன அத்தகைய நியதி நிபந்தனைகளின்மேல் புகையிரத அதிகார சபையினல் ஊழியத்தில் அமர்த்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாருயினும் அத்தகைய நியதி நிபந்தனைகள் அத்தகைய அலுவலர் புகையிரத திணைக்களத்தில் எந் நியதி நிபந்தனைகளின் கீழ் முன்னர் ஊழியத்தில் அமர்த்தப்பட் டாரோ அந் நியதி நிபந்தனைகளுக்குக் குறைவான சாதகமான தாய் இருத்தலாகாது;

(ஆ) நியமித்த தேதியன்று அத்தகைய அலுவலர், ஓய்வூதியத்தை புடையதென வெளிப்படுத்தப்பட்டதும் பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக அத்துடன் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாத, ஓய் வூதியத்தையுடைய சேவைகளைப் புரிந்திருக்கின்ற பதவி யொன்றை வகிக்கும் புகையிரத திணைக்களத்தின் பகிரங்க அலு வலரொருவராக இருந்தாரானுல் —

(i) அவர், ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களுக்கு மட்டு மான நோக்கங்களுக்காக அரசாங்கத்தின் கீழான அவ ருடைய ஓய்வூதியமுடைய சேவையுடன் சேர்த்துக் கொள்ளப்படும்போது பத்தாண்டுகள் கூட்டு மொத்தத் தொகையொன்றுக ஓய்வூதியச் சேவையை ஆக்குகின்ற வாறன அத்தகைய காலப்பகுதி வரைக்கும் நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று அவர் வகித்த பதவியைப் புகையிரத திணைக்களத்தில் வகித்ததாகக் கருதப்படுதல் வேண்டும். (அத்தகைய கூட்டு மொத்தத் தொகையைக் கணிப்பதற்குப் புகையிரத அதிகார சபையின் கீழான சேவையானது ஓய்வூதியமுடைய சேவையாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்);

(ii) அவர் தொடர்பில் எச்சேவைக் காலப்பகுதியின்போது, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கத்துக்காக, நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று அவர் புகையிரத திணைக்களத்தில் பதவியை வகிக்கின்றவராகக் கருதப்படுகின்றாரோ, அச் சேவைக் காலப்பகுதியின்போது பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு மாதத்துக்கும் புகையிரத அதிகார சபையின் நிதியிலிருந்து நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை, திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுவதற்கெனத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்குப் புகையிரத அதிகார சபை கொடுப்பனவு செய்தல் வேண்டும்; அத்துடன்

(iii) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காலப் பகுதியின் முடிவின்போது பகிரங்க சேவையில் இருந்து அவர் ஓய்வுபெற்றுவிட்டாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய காலப்பகுதி முடிவுற்றதன் மேல், பதவி இல்லாதொழிக்கப்பட்ட ஏதுவின் மேல் பகிரங்க சேவையிலிருந்து அவர் ஓய்வு பெற்றிருந்தாரானால் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய ஓய்வூதியதுக்கு, ஓய்வூதிங்கள் மீதான குறிப்புகளின் கீழ் அவர் தகவுடையவராதலும் வேண்டும்.

(iv) இப்பந்தியின்கீழ் ஓய்வூதியமொன்றுக்கு தகவுடையவராக வரும் புகையிரத அதிகார சபையின் அலுவலர் ஒருவர், 13 ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான அளிப்பொன்றுக்குத் தகவுடையவராதலாகாது.

(இ) இச்சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணுக உள்ளது எது எப்படியிருப்பினும், 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் செயற்பாடு காரணமாக, புகையிரதத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் புகையிரத அதிகாரசபையின் அலுவலர் ஒருவராக வருகின்றவிடத்து—

(i) அத்தகைய அலுவலர், நியமித்த தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராயிருந்து தமது ஓய்வூதியத்தில் முழுவதையும் பெற்றுக் கொள்வதற்குத் தெரிவுசெய்தால், புகையிரத அதிகார சபையில் அவர் ஊழியத்திலுள்ள காலப்பகுதியின்போது அத்தகைய ஓய்வூதியம் அவருக்கு வழங்கப்படுதலாகாது.

(ii) அத்தகைய அலுவலர் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராகவிருந்து, அத்துடன் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் 2அ (1) (i) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பகுதியளவுக் கணக்கீடாகத் தமது ஓய்வூதியத்தின் நான்கில் ஒரு பாகத்தைப் பணிக்கொடையொன்றாகப் பெற்றுக்கொள்ளத் தெரிவுசெய்தால்—

(அ) அத்தகைய பணிக்கொடையானது அவருக்கு வழங்கப்படுதலாகாது, ஆனால் புகையிரத அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றில் அவரது கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சொல்லப்பட்ட குறிப்பின்கீழ் அவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்தில் எஞ்சியிருக்கும் நான்கில் மூன்று பாகமானது, புகையிரத அதிகாரசபையில் அவர் ஊழியத்திலிருக்கும் காலப்பகுதியின்போது அவருக்குச் செலுத்தப்படுதலாகாது.

(இ) சொல்லப்பட்ட குறிப்புகளின் 2அ (i), (ii) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள "அவர் ஓய்வு பெற்ற தேதியிலிருந்து பத்து ஆண்டுகள்" காலப் பகுதியைக் கணக்கிடும் நோக்கத்துக்காக அவர் ஓய்வுபெற்ற தேதியானது, புகையிரத அதிகார சபையில் அவர் ஊழியத்தில் இருந்த கடைசித் தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(iii) அத்தகைய அலுவலர் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் ஓய்வூதியமொன்றுக்கல்லாமல் பணிக்கொடையொன்றுக்கே தகவுடையவராகவிருந்தால், அத்தகைய பணிக்கொடையானது அவர் புகையிரத அதிகாரசபையில் ஊழியத்தில் இருக்கும் காலப்பகுதியின்போது அவருக்கு வழங்கப்படுதலாகாது, ஆனால் புகையிரத அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றில் அவரது கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(iv) அத்தகைய அலுவலர் பணத்தொகை எதனையும் பெற்றுக்கொள்வதற்கு பகிரங்கசேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தகவுடையவராக இருந்தால், அத்தகைய பணத்தொகையானது புகையிரத அதிகாரசபையில் அவர் ஊழியத்திலிருக்கும் காலப்பகுதியின்போது அவருக்குச் செலுத்தப்படுதலாகாது. ஆனால் புகையிரத அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றில் அவரது கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

15. (1) புகையிரதத் திணைக்கள அலுவலர் என்றவகையில் புகையிரத அதிகாரசபைக்காகவும் அதன் சார்பிலும் தொழில்புரிந்துகொண்டும் புகையிரத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒருவராக நியமித்த தேதியன்றும் அதன்பின்னரும் தொடர்ந்தும் பதவியிலிருக்கின்ற ஆளெவரும், அதன்பின்னர் எந்நேரத்திலும், அவரது சம்மதத்துடன் புகையிரத அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் புகையிரத அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர் எவரும் நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

புகையிரதத் திணைக்கள அலுவலர்கள் என்றவகையில் புகையிரத அதிகார சபைக்காக அத்துடன் அதன் சார்பில் தொழில் புரிந்து கொண்டும் நியமித்த தேதியன்றும் அதற்குப் பின்னரும் புகையிரதத் திணைக் களத்தில் பகிரங்க அலுவலர்களாகத் தொடர்ந்தும் இருக்கின்ற குறித்த சில ஆட்களுக்கு ஏற்புடைத் தாகும் சிறப்பு ஏற்பாடுகள்.

## பாகம் III

### புகையிரத அதிகாரசபையின் ஆதனம்.

16. (1) நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று அரசுக்கு உரித்தாக்கப்பட்டு புகையிரத திணைக்களத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட அசைவுள்ள அத்துடன் அசைவற்ற எல்லா ஆதனமும் (புகையிரத திணைக்களத்தினால் நிறுவப்பட்ட அல்லது பேணப்பட்ட எல்லா நிறுவுகைகள், பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அத்துடன் உபகரணம், அத்துடன் புகையிரத சேவைகள் வழங்குவதற்குப் புகையிரத திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட எவ்விவரணத்தினதுமான எல்லாப் பொருட்கள், நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று புகையிரத திணைக்களத்தின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகளிலிருந்து புகையிரத திணைக்களத்தின் வரவில் இருக்கின்றவவான பணங்கள் ஆகியன உட்பட) நியமித்த தேதியிலிருந்து புகையிரத அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

புகையிரதத் திணைக்களத்தின் ஆதனம் எல்லாவற்றையும் புகையிரத அதிகார சபைக்குக் கைமாற்றுதல்.

(2) அரசுக்காக அல்லது அதன் சார்பில் புகையிரத சேவையின் பொது முகாமையாளரினால் அல்லது அவருடன் செய்துகொள்ளப்பட்டு, நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கும் எல்லா ஒப்பந்தங்களும் நியமித்த தேதியிலிருந்து புகையிரத அதிகாரசபையினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கப் பயனுறுத்தவும்படலாம்.

(3) புகையிரத சேவைப் பொதுமுகாமையாளரினால் அல்லது அவருக்கு எதிராக அல்லது புகையிரத சேவைப் பொது முகாமையாளரைப் பிரதிநிதித்துவம் செய்யும்படி சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்டு, நியமித்த தேதிக்கு முந்திய

நாளன்று முடிவுறாதிருக்கும் எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும், நியமித்த தேதியிலிருந்து புகையிரத அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் பூர்த்தியாக்கப்படுதலும் வேண்டும்.

(4) புகையிரதசேவைப் பொதுமுகாமையாளரினால் அல்லது அவருக்கு எதிராக அல்லது அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும்படி சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் ஆக்கப்பட்டு அல்லது வழங்கப்பட்டு நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற எல்லாத் தீர்வைகளும் அளிப்புகளும், நியமித்த தேதியிலிருந்து புகையிரத அதிகாரசபைக்காக அல்லது அதற்கு எதிராக ஆக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட தீர்வைகள் அல்லது அளிப்புகள் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அவை பயனுறுத்தவும் படலாம்.

(5) அரசுக்காகவும் அதன் சார்பிலும் புகையிரத சேவைப் பொது முகாமையாளரினால் உறப்பட்டு, நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கின்ற எல்லாப் பொறுப்புகளும் (அரசுக்காகவும் அதன் சார்பிலும் புகையிரத சேவைப் பொது முகாமையாளரால் ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்துடன் அல்லது வெளிநாட்டுத் தாபனத்துடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் கீழ் உறப்பட்டு நியமித்த தேதியில் உளதாயிருக்கின்ற அத்தகைய பொறுப்புக்கள் அல்லாத) நியமித்த தேதியிலிருந்து புகையிரத அதிகார சபையின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) புகையிரத சேவைக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் புகையிரத சேவைப் பொது முகாமையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட தத்துவம், கடமை அத்துடன் பணி ஒவ்வொன்றும் நியமித்த தேதியிலிருந்து புகையிரத அதிகாரசபையினால் பிரயோகப்படுத்தப்படுதல், புரியப்படுதல் அத்துடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும் அத்துடன், புகையிரத சேவைப் பொது முகாமையாளர் தொடர்பில் செய்யப்படவேண்டுமென எழுத்திலான அத்தகைய வேறு சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் செயல் நியமித்த தேதியிலிருந்து புகையிரத அதிகாரசபை தொடர்பில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய எழுத்திலான வேறு சட்டத்தில் உள்ள "புகையிரத சேவைப் பொது முகாமையாளர்" பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் நியமித்த தேதியிலிருந்து "இலங்கை புகையிரத அதிகாரசபை" பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**அரச காணிகளை புகையிரத அதிகார சபைக்கு உரித்தாக்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.**

17. (1) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் அதனது பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காகப் புகையிரத அதிகார சபைக்கு அரச காணி எதுவும் தேவைப்படுகின்றதென அமைச்சர் கருதுகின்றவிடத்து, அமைச்சர், காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கசெற்றில் வெளியிடப்படும்

கட்டளைமூலம் (இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் "உரித்தாக்கற கட்டளை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) அதில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய (அவ்வாறு எவையேனும் இருப்பின்) அத்தகைய காணியை அத் தகைய தேதியிலிருந்து புகையிரத அதிகார சபைக்கு உரித்தாக்குதல் வேண்டும்.

(2) உரித்தாக்கற் கட்டளையொன்று அதனகத்துக் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறான அத்தகைய கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, அத்தகைய உரித்தாக்கற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காணிக்கான பூரண உரித்தைப் புகையிரத அதிகார சபைக்குக் கொடுக்கும் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

18. (1) அரசுக்கு உரித்தான அசைவற்ற ஆதனம் தவிர்ந்த வேறு அசைவற்ற ஆதனம் எதுவும் புகையிரத அதிகார சபையின் நோக்கங்களுக்குத் தேவைப்படுத்தப்பட்டும் அத்துடன், புகையிரத அதிகாரசபையானது அத்தகைய ஆதனத்தை உடன்படிக்கைவாயிலாக கொள்வனவு செய்யமுடியாதுமிருக்கின்றவிடத்தும் அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடும் கட்டளைமூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரித்தால், அந்த ஆதனமானது பொது நோக்கமொன்றிற்காகத் தேவைப்படுத்தப் பட்டுள்ளதெனக் கருதப்படலாமென்பதுடன், அதற்கிணங்க காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் கொள்ளப்படலாமென்பதுடன், அந்தச் சட்டத்தின் கீழ் புகையிரத அதிகாரசபைக்குக் கைமாற்றவும்படலாம்.

*காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் புகையிரத அதிகார சபைக்காக அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல்.*

(2) காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் அரசினால் செய்யப்பட்ட அசைவற்ற ஆதனக் கொள்ளுகை எதற்கும் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, புகையிரத அதிகார சபையினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

## பாகம் IV

### நிதி.

19. (1) புகையிரத அதிகார சபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*புகையிரத அதிகார சபையின் நிதியம்.*

(2) பின்வருவன புகையிரத அதிகார சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) புகையிரத அதிகார சபையின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் புகையிரத அதிகாரசபை அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிக்கையிலும், புரிகையிலும் அத்துடன் நிறைவேற்றுகையிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடு எதனையும் நடைமுறைக்குக் கொண்டு வந்தமை காரணமாகப் புகையிரத அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) புகையிரத அதிகாரசபை இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் என்பவற்றைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் அதனால் உறப்படும் எல்லாச் செலவு தொகைகளையும் கொடுத்துத் தீர்ப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் புகையிரத அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

புகையிரத அதிகார சபையின் பங்குத் தொகுதிகள்.

20. (1) புகையிரத அதிகார சபையானது இச்சட்டத்தின் கீழான அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அதனால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் பணத்தொகைகளைத் திரட்டும் நோக்கத்திற்காக ஏதேனும் பங்குத் தொகுதியை உருவாக்கி அதனை வழங்கலாம்.

(2) புகையிரத அதிகார சபைப் பங்குத் தொகுதியானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரால் கொடுக்கப்படும் அங்கீகாரத்துடன் புகையிரத அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்க வழங்கப்படுதலும், கைமாற்றப்படுதலும், கையாளப்படுதலும், மீளப்படுதலும் அத்துடன் இல்லாதாக்கப்படுதலும் வேண்டும்.

அரசாங்க உத்தரவாதம்.

21. (1) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரானவர், அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டதும் வழங்கப்பட்டதுமான ஏதேனும் புகையிரத அதிகாரசபைப் பங்குத் தொகுதியின் மீதான, அல்லது இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே ஆளெவரிடமிருந்தும் புகையிரத அதிகார சபையால் எடுக்கப்பட்ட வேறு ஏதேனும் கடன் முதலின், மீள் கொடுப்பனவையும் அதன் மீதான வட்டிக் கொடுப்பனவையும் உத்தரவாதமளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தரவாதமொன்றை நிறைவேற்றுவதற்காகத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் பணத்தொகை, பாராளுமன்றத்தின் முன்னங்கீகாரத்துடன் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட உத்தரவாதமொன்றை நிறைவேற்றுகையில் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய விதத்தில், அதன் மீதான வட்டியுடன் சேர்த்து அத்தகைய ஒருப்பாட்டுடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய விதத்திலும் அத்துடன் அத்தகைய காலப்பகுதியின்போதும் புகையிரத அதிகார சபையினால் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்தை உடனடுத்து, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் உத்தரவாதத்தின் கூற்றொன்றைப் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பித்தல் அல்லது சமர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தரவாத மொன்றை நிறைவேற்றுகையில் (2) ஆம் உட்பிரிவின் கீழ் திரட்டு நிதியத்திலிருந்து ஏதேனும் பணத்தொகை செலுத்தப்பட்டிருக்குமிடத்து, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கொடுப்பனவு பற்றிய கூற்றொன்றை உடனடியாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் அல்லது சமர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை

22. இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அடுத்துச் செய்யப்படும் ஏதேனும் வெளிப்படையான ஏற்பாட்டுக்கு அமைவாக, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், புகையிரத அதிகாரசபையின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும், அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சபையின் கடனெடுக்கும் தத்துவம்.

23. சபையானது, அமைச்சரினதும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதேபோன்ற ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, மேலதிகப் பற்று வாயிலாக அல்லது வேறுவகையாக, இச்சட்டத்தின் கீழான அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காகச் சபைக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகளை இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கடனாகப் பெறலாம் :

ஆயின், இப்பிரிவின்கீழ் சபையினால் பெறப்பட்ட எவையேனும் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகையின் கூட்டுமொத்தம், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன், அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை எந்த நேரத்திலும் விஞ்சுதலாகாது.

மூலதன முதலீடுகள்.

24. குறிக்கோள் சார்ந்ததும் உண்மை ரீதியானதுமான நிதிகள் மதிப்பீடொன்றின் பின்னர் தவிர, மூலதன முதலீடு எதுவும் சபையினால் செய்யப்படுதலாகாது. அத்தகைய மதிப்பீடு உத்தேசிக்கப்பட்ட முதலீட்டினால் உருவாக்கப்படும் வருவாய் மூலதனத்தில் நேர்தான திரும்பலொன்றை ஏற்பாடு செய்யும் என முடிவாகக்காட்டினாலொழிய, அத்தகைய முதலீடு எதுவும் மேற்கொள்ளப்படுதலாகாது.

புகையிரத அதிகாரசபையின் வருவாயைப் பிரயோகித்தல்.

25. மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான வருமானம் உட்பட, அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் பெறப்பட்டனவும் திரண்டனவுமான பணங்களைக் கொண்ட ஏதேனும் ஆண்டிலான புகையிரத அதிகாரசபையின் வருவாயானது, பின்வரும் கொடுப்பனவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;—

(அ) புகையிரத அதிகாரசபை அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தல் புரிதல் என்பவற்றுடன் தொடர்பாக வருவாய்க் கணக்குக்கு முறையாகப் பொறுப்பிக்கத் தகுந்ததாக உறப்பட்ட தொழிற்பாட்டு அத்துடன் தாபனச் செலவுகள்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் புகையிரத அதிகாரசபையால் திரட்டப்பட்ட எவையேனும் கடன்கள் மீதான வட்டி; அத்துடன்

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான வரிகள்.

புகையிரத அதிகார சபையின் தேசிய மேன்மிகை வருமான ஒதுக்கீடு செய்தல்.

26. பிரிவு 25இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விதிப்பனவுகளைக் கொடுத்துத் தீர்த்தபின் புகையிரத அதிகாரசபையின் வருவாயிலிருந்து ஏதேனும் ஆண்டிற்கான தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின் அது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன், பின்வரும் நோக்கங்களில் எதற்காகவும் அல்லது எல்லாவற்றிற்காகவும் சபையினால் ஒதுக்கீடு செய்யப்படலாம் :—

(அ) புகையிரத அதிகார சபையைத் தாபிப்பதில் உறப்பட்ட பூர்வாங்கச் செலவுகளைப் பதிவழித்தல்;

(ஆ) முன்கொணரப்பட்ட ஏதேனும் ஒன்றுதிரண்ட நட்டங்களைப் பதிவழித்தல்;

(இ) வருவாய்க்கு முறையாகப் பொறுப்பிக்கப்பட முடியாத ஆக்க பூர்வமற்ற ஏதேனும் செலவினத்தைப் பதிவழித்தல்;

(ஈ) சபையானது இத்தால் தாபித்து அத்துடன் பேணும்படி அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதி ஒதுக்கத்திற்கான கைமாற்றங்கள்;

(உ) சபையானது இத்தால் தாபித்துப் பேணும்படி அதிகாரமளிக்கப்பட்ட சொத்து மாற்றீடு ஒதுக்கத்திற்கான கைமாற்றங்கள்;

(ஊ) சபையானது இத்தால் தாபித்துப் பேணும்படி அதிகாரமளிக்கப்பட்ட கடன் மீட்பு ஒதுக்கத்திற்கான கைமாற்றங்கள்;

(எ) சபையானது இத்தால் தாபித்துப் பேணும்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அபிவிருத்தி ஒதுக்கத்திற்கான கைமாற்றங்கள்;

(ஏ) (மீட்பு உட்பட) வழங்கப்பட்டு நிலுவையாகவுள்ள புகையிரத அதிகாரசபைப் பங்குத் தொகுதிகளின் மீதான வட்டி அத்துடன் ஏனைய விதிப்பனவுகள் என்பவற்றின் கொடுப்பனவு.

புகையிரத அதிகார சபையின் ஒதுக்கங்களை தொழிற்படுத்துதல்.

27. நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடனன்றி, 26ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கங்களுக்கு எதிரான பற்றுக்கள் அல்லது அவற்றிலிருந்து கைமாற்றுதல்கள் எவையும் சபையினால் செய்யப்படுதலாகாது.

கணக்குகள்.

28. (1) சபையானது, புகையிரத அதிகார சபையின் வருமானம் மற்றும் செலவினம் அத்துடன் அதன் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டுமென்பதுடன், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சர் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்தில், அத்தகை விபரங்களைக் கொண்டதான புகையிரத அதிகாரசபையின் தொழில் தொடர்பிலான கணக்குகள், புள்ளிவிபரவியல் என்பன பற்றிய ஆண்டுக் கூற்றொன்றைத் தயாரித்தலும் வேண்டும்.

(2) மேற்கொள்ளப்படும் கணக்கீட்டு முறைமையானது, புகைவண்டி ஆகுசெலவு முறைமைக்கான வரலாற்றுத் தகவலை அளிக்குமாறு வடிவமைக்கப்படுதல் வேண்டும். ஆகுசெலவு முறைமையானது நியாயபூர்வ விலை குறித்தல் மற்றும் சந்தை முடிவுகளைச் செய்வதை இயலச் செய்யுமாறு மாறாத அத்துடன் மாறும் செலவுகள், நீண்டகால, குறுகிய காலச் செலவுகள், அத்துடன் ஏனைய தனிப்பட்ட துறைகள், பண்டங்கள், நடவடிக்கைகள் என்பனவற்றிற்கான உரிய ஆகுசெலவுக் கொள்கைகள் உள்ளடங்கலான புகையிரதத் தொழிற்பாட்டின் பூரண செலவைத் தீர்மானிக்கும் விதமாக வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

**கணக்குகளின் கணக்காய்வு.**

29. (1) புகையிரத அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், புகையிரத அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**ஆண்டறிக்கை.**

30. (1) சபையானது, ஏதேனும் ஆண்டு தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையை பெற்றதன்மேல், அவ்வாண்டு தொடர்பிலான பின்வரும் ஆவணங்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை அமைச்சருக்கு அனுப்புவிக்கச் செய்தல் வேண்டும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை;

(ஆ) கணக்காய்வு செய்யப்பெற்ற ஐந்தொகை;

(இ) கணக்காய்வு செய்யப்பட்ட தொழிற்பாட்டு மற்றும் லாப நட்டக் கணக்குகள்;

(ஈ) காசு போக்குக்கூற்று;

(உ) பிரிவு 28இன் கீழ் தயாரிக்கப்பட்ட கணக்குகளினதும் புள்ளிவிபரங்களினதும் கூற்று; அத்துடன்

(ஊ) புகையிரத அதிகாரசபையின் வேலை பற்றிய கணக்கொன்றைத் தருகின்றதான சபையின் தவிசாளரினது அறிக்கை.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகளை, அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எந்த ஆண்டு தொடர்பிலானதோ அந்த ஆண்டைத்தொடர்ந்து வரும் அடுத்த ஆண்டின் இறுதிக்கு முன்னர் பாராளுமன்றத்தின்முன் வைத்தல் வேண்டும்.

(3) சபையானது, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிக்கைகளினதும் கூற்றுக்களினதும் பிரதிகளை புகையிரத அதிகார சபையின் செலவில் அச்சிடுவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சபையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய விலைக்கு பொது மக்களினால் கொள்வனவு செய்வதற்குக் கிடைக்கப்பாலதாகச் செய்வித்தலும் வேண்டும்.

## பாகம் V

### பொது

ஒப்பந்தங்கள்.

31. புகையிரத அதிகாரசபை சார்பிலான ஒப்பந்தங்கள் பின்வருமாறு செய்யப்படலாம்:—

(அ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்படுமாயின் எழுத்தில் இருக்க வேண்டுமெனச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்று புகையிரத அதிகாரசபையின் இலச்சினையின் கீழ் புகையிரத அதிகாரசபையின் சார்பில் எழுத்தில் ஆக்கப்படலாம்;

(ஆ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்படுமாயின் எழுத்தில் இருக்க வேண்டுமெனவும் அதற்காகப் பொறுப்பாக்கப்பட வேண்டிய திறத்தவர்களினால் ஒப்பமிடப்பட வேண்டுமெனவும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்று எழுத்தில் ஆக்கப்படலாம் என்பதுடன், புகையிரத அதிகாரசபையின் சார்பில் சபையினால் அதற்கென முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் ஒப்பமிடவும் படலாம்; அத்துடன்

(இ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே வாய்மொழி மூலமாக மாத்திரம் செய்யப்பட்டிருந்து எழுத்தில் ஆக்கப்படாது இருந்திருப்பினும் சட்டப்படி செல்லுபடியுடைய ஒப்பந்தமொன்று, சபையினால் அதற்கென முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் புகையிரத அதிகாரசபையின் சார்பில் வாய்மொழி மூலமாக மாத்திரம் ஆக்கப்படலாம்.

புகையிரத அதிகாரசபையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் நோக்கங்களுக்காகப் பகிரங்க சேவையாளர்களாக இருத்தல் வேண்டுமென்பது.

32. சபையின் எல்லா உறுப்பினர்களும் புகையிரத அதிகாரசபையின் அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கத்திற்கும் அதன் கருத்தெல்லைக்கும் உட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

33. புகையிரத அதிகாரசபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் புகையிரத அதிகார சபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப் படுதல்.

34. (1) புகையிரத அதிகாரசபையின் இலச்சினையானது சபையினது அல்லது சபையினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பெற்ற புகையிரத அதிகாரசபையின் எவரேனும் அலுவலரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

புகையிரத அதிகார சபையின் இலச்சினை.

(2) புகையிரத அதிகாரசபையின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) புகையிரத அதிகார சபையின் இலச்சினையானது சபையின் தவிசாளரினதும் சபையினால் அதிகாரமளிக்கப்பெற்ற வேறொரு உறுப்பினரதும் முன்னிலையிலன்றி எச்சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் இடப்படலாகாது. அவர்கள் இருவரும் தாம் சமுகம் அளித்ததற்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

35. (1) தொடர்ச்சி அல்லது வழக்குத்தொடுப்பு எதுவும்—

நடவடிக்கையின் பாதுகாப்பு.

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது புகையிரதக் கட்டளைச் சட்டத்தின் கீழ் புகையிரத அதிகாரசபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் எதற்காகவும் புகையிரத அதிகாரசபைக்கு எதிராக இருத்தல் ஆகாது; அல்லது

(ஆ) சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது புகையிரத அதிகார சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது புகையிரதக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது புகையிரத அதிகாரசபையின் பணிப்பின் மீது அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராக இருத்தல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் புகையிரத அதிகாரசபையினால் அல்லது அதற்கு எதிராகக் கொண்டு வரப்படும் தொடர்ச்சி அல்லது வழக்குத்தொடுப்பு எதிலும் புகையிரத அதிகாரசபையால் உறப்படும் ஏதேனும் செலவு, புகையிரத அதிகாரசபையின் நிதியிலிருந்து செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது வழக்குத்தொடுப்பில் புகையிரத அதிகாரசபைக்குச் செலுத்தப்படும் அல்லது புகையிரத அதிகாரசபையினால் அறவிடப்படும் எவையேனும் செலவு தொகைகள் புகையிரத அதிகாரசபையின் நிதியில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது புகையிரதக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது புகையிரத அதிகாரசபையின் பணிப்பின்மீது அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் நீதிமன்றம் எதன் முன்னரும் அவருக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட தொடர்ச்சி அல்லது வழக்குத்தொடுப்பு எதிலும் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதின், அத்தகைய செலவு அவரினால் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது வழக்குத்தொடுப்பில் அறவிடப்பட்டாலொழிய, புகையிரத அதிகாரசபையின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

1979 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அரச காணிகள் (உடைமை மீளப்பெறுதல்) சட்டத்தைத் திருத்துதல்.

36. 1979 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, அரச காணிகள் (உடைமை மீளப்பெறுதல்) சட்டமானது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முறையில் திருத்தப்படுகின்றது.

(200 ஆம் அத்தியாயமான) புகையிரதக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துதல்.

37. புகையிரதக் கட்டளைச் சட்டமானது இச்சட்டத்திற்கான மூன்றும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முறையில் திருத்தப்படுகின்றது.

ஒழுங்கு விதிகள்.

38. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் அல்லது இச்சட்டத்தினால் அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் உசிதமானளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் ஏலவே ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதியானது அவ்வாறு இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தலானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

39. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினலன்றி — பொருள் கோடல்.

"மூலதன முதலீடு" என்பது அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஓரினச் சொற்றொடர்களுடனும், புகையிரத அதிகார சபையினுல் அதன் இரும்புப்பாதை வேலையமைப்பை அல்லது அதன் தொழிற்பாட்டுத் திறமையை அதிகரிப்பதில் அல்லது ஏதேனும் மூலதனச் சொத்தை கொள்வனை செய்வதில் அல்லது பழுது பார்ப்பதில் அல்லது புதுப்பிப்பதில் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை என்று பொருளாகும்;

"தவிசாளர்" என்பது 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட புகையிரத அதிகார சபையின் தவிசாளர் என்று பொருள்படும்;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை என்று பொருள்படும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையினுல் அல்லது பிரதேச சபையினுல் பிரயோகிக்கப்படும் புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் ஒத்த அல்லது அவற்றிற்கு நேரொத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

"முகாமைப் பணிப்பாளர்" என்பது 9 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட புகையிரத அதிகாரசபையின் முகாமைப் பணிப்பாளர் என்று பொருள்படும்;

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் XVIIஅ எனும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாணசபை ஒன்று என்று பொருள்படும்,

"பகிரங்க சேவைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம்" என்பது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு, மாகாண சபைக்கு அல்லது உள்ளூரதிகார சபைக்குச் செய்யப்படும் எவையேனும் சேவைகளுக்காகவும் அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்வதில் புகையிரத அதிகார சபையினால் உறப்படும் ஏதேனும் மூலதனச் செலவுகளுக்காகவும் 6ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களிலும் இறுப்புக்களிலும் அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்வதில் புகையிரத அதிகார சபையினால் உறப்பட்ட எவையேனும் நட்டங்களை புகையிரத அதிகார சபைக்கு மீளளிப்புச் செய்வதற்கென அரசாங்கத்திற்கும் புகையிரத அதிகார சபைக்குமிடையே செய்து கொள்ளப்படும் ஓர் ஒப்பந்தம் என்றுபொருள்படும்.

40. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

## முதலாவது அட்டவணை [பிரிவு 3 (3)]

### சபையின் உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்.

1. ஆளொருவர், அவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராக, ஓர் உள்ளூராதிகார சபையின் அல்லது ஒரு மாகாண சபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால், சபையின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

2. சபையில் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக ஓர் ஆளை நியமிப்பதற்கு முன்னர், அமைச்சரானவர், சபையின் தவிசாளராக அல்லது உறுப்பினராக அவரது பணிகள் அத்தகைய ஆளினால் நிறைவேற்றப்படுவதைப் பங்கப்படுத்தக் கூடியவாறு ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை அத்தகைய ஆள் கொண்டிருக்கவில்லையெனத் தன்னை திருப்திப்படுத்துதல் வேண்டும். அத்துடன், அமைச்சரானவர், அவரினால் நியமிக்கப்படும் சபையின் தவிசாளரதும் ஒவ்வொரு உறுப்பினரதும் தொடர்பில் அவர் அத்தகைய ஏதேனும் அக்கறையைக் கொண்டிருக்கவில்லையெனக் காலத்துக்குக்காலம் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும். அமைச்சரினால் சபையின் தவிசாளராக அல்லது உறுப்பினராக நியமிக்கப்பட்ட அல்லது அமைச்சர் அவ்வாறு நியமிப்பதற்கு எவரை உத்தேசித்துள்ளாரோ அத்தகைய ஆளெவரும், அமைச்சரால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது, இப்பந்தியின்கீழ் அமைச்சரின் கடமைகளைப் புரிவதற்கு அவசியமென அமைச்சர் கருதுகின்றவாறான அத்தகைய தகவலை அமைச்சருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

3. சபையினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தம் எதிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வகையிலும் அக்கறை கொண்டுள்ள சபையின் தவிசாளர் அல்லது ஓர் உறுப்பினர், சபையின் கூட்டமொன்றில் அத்தகைய அக்கறையின் தன்மைப்பற்றி வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை சபையின் குறிப்புகளில் பதிவுசெய்யப்படுதலும் வேண்டும், அத்துடன் தவிசாளர் அல்லது உறுப்பினர் அந்த ஒப்பந்தம் தொடர்பாக சபையின் ஏதேனும் கலந்தாராய்வு அல்லது முடிவு எதிலும் பங்குபற்றுதல் ஆகாது.

4. அமைச்சரினால் நியமிக்கப்பட்ட சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், இவ்வட்டவணையின் 5 ஆம், 6 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைவாக அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், இவ்வட்டவணையின் 5 ஆம் பந்தியின்கீழ் அவர் பதவியினின்று அகற்றப்பட்டாலன்றி மீளத்தெரிவு செய்யப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின் பதவியை வறிதாக்குகின்ற தவிசாளரின் அல்லது ஓர் உறுப்பினரின் இடத்துக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தவிசாளர் அல்லது ஓர் உறுப்பினர், முன்னராக அவர் பதவியை வறிதாக்கினாலன்றி எத்தவிசாளரை அல்லது உறுப்பினரை, அடுத்து அவர் வருகின்றாரோ அந்த தவிசாளரின் அல்லது உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

5. அமைச்சரானவர், அதற்கான காரணமெதுவும் காட்டாமல், அவரினால் நியமிக்கப்பட்ட சபையின் தவிசாளரை அல்லது எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுதல் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்கு உட்படுத்தப்படுதலாகாது.

6. அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தவிசாளர் அல்லது ஓர் உறுப்பினர் அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

7. சபையின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் சுகவீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக தமது பதவிக் கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதிருக்குமிடத்து —

(அ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தவிசாளர் அல்லது உறுப்பினராக அவர் இருந்தால் அமைச்சரானவர் விடயத்துக்கேற்ப தவிசாளரின் அல்லது அவ்வுறுப்பினரின் இடத்தில் பதிற்கடமையாற்றவென வேறு ஆளை நியமிக்கலாம் ; அல்லது

(ஆ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக அவரிருந்தால், அவ்வுறுப்பினரின் இடத்தில் பதிற்கடமையாற்றுவதற்கென பொதுத் திறைசேரியிலிருந்து வேறொரு பிரதிநிதியை அமைச்சரானவர் பெயர் குறித்து நியமிக்கலாம்.

8. சபையின் எல்லா அல்லது எவரேனும் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதியம், படிகள் அத்துடன் வேறு செலவுகள் புகையிரத அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

9. சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும். சபையின் தவிசாளர், சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு வருகை தராதிருந்தால் சமூகமாயிருக்கும் உறுப்பினர்கள் தமக்குள்ளிருந்து ஒரு உறுப்பினரை கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கெனத் தெரிவு செய்தல் வேண்டும்.

10. இவ்வட்டவணையின் வேறு ஏற்பாடுகளுக்கமைவாக சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பாகவும் அதன் சொந்த நடவடிக்கைமுறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

11. சபையானது அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஏதேனும் இருப்பது எப்படியிருப்பினும் செயல்படலாம். அத்துடன் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றது என்ற காரணத்தினால் மாத்திரம், அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் முறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தினால் மாத்திரம் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

இரண்டாம் அட்டவணை (பிரிவு 36)

(1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரச காணிகளுக்கான (உடைமைமீட்டல்) திருத்தங்கள்)

அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவில் —

(அ) அப்பிரிவில் காணப்படும் "தகுதிவாய்ந்த அதிகாரி" என்னும் வரைவிலக்கணத்தில், அவ்வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :—

"(அ) 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபையின் கட்டுப்பாட்டின்கீழ் அத்தகைய காணி இருக்குமிடத்து, புகையிரத அதிகாரசபையின் முகாமைப் பணிப்பாளர்;

(ஆ) அப்பிரிவில் காணப்படும் "அரச காணி" என்பதன் வரைவிலக்கணத்தில் "அல்லது விடயத்துக்கேற்ப 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்" என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "விடயத்துக்கேற்றாற் போன்று 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் அல்லது 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகார சபைச் சட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

மூன்றும் அட்டவணை (பிரிவு 37)

புகையிரதக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்கள்.

1. இதன்கீழ் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சொற்றொடர் அல்லது சொல், அக்கட்டளைச்சட்டத்தின் ஏதேனும் பிரிவில் அச்சொற்றொடர் அல்லது சொல் தோன்றுகின்றவிடமெல்லாம் இதன்கீழ் நிரை II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்றொடரை அல்லது சொல்லை இடுவதன் மூலம்—

| நிரை I | நிரை II |
|---|---|
| சொல் அல்லது சொற்றொடர் | சொல் அல்லது சொற்றொடர் |
| அரசாங்கம் | இலங்கைப் புகையிரத அதிகாரசபை |
| பொது முகாமையாளர் | இலங்கைப் புகையிரத அதிகாரசபை |
| புகையிரதப் பகுதிப் பொது முகாமையாளர் | இலங்கைப் புகையிரத அதிகாரசபை |
| புகையிரத அதிகாரசபைகள் | இலங்கைப் புகையிரத அதிகாரசபை |

2. அக்கட்டளைச்சட்டத்தின் 2, 3, 4 அத்துடன் 4அ என்னும் பிரிவுகளையும், அக்கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணையையும் நீக்கஞ்செய்வதன் மூலம்.

3. அக்கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் "உடன் விதித்துரைக்கப்பட்ட ஒரு தொகையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உடன், இலங்கைப் புகையிரத அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படவேண்டிய ஒரு தொகையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

4. அக்கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "புகையிரதத் திணைக்கள அலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "புகையிரத அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

5. அக்கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "புகையிரதத் திணைக்கள அலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "புகையிரத அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

6. அக்கட்டளைச்சட்டத்தின் 44 ஆம் பிரிவில்—

(அ) "புகையிரதப்பகுதி" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம்:—

'"புகையிரதப் பகுதி" என்பது இலங்கைப் புகையிரத அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் அல்லது அதன் சார்பில் நிருமாணிக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட ஏதேனும் புகையிரதப்பகுதியினையும் உள்ளடக்கும்;'

(ஆ) "புகையிரத அலுவலர்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"புகையிரத அலுவலர்" என்பது, இலங்கைப் புகையிரத அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் எனப் பொருள்படும் என்பதுடன், ஏதேனும் புகையிரதப்பகுதி மீது ஏதேனும் செயலைச் செய்யவென இலங்கைப் புகையிரத அதிகாரசபையினால் அப்போதைக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;' அத்துடன்

(இ) "புகையிரத அலுவலர்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் :—

'"இலங்கைப் புகையிரத அதிகாரசபை" என்பது, 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் புகையிரத அதிகாரசபை எனப் பொருள்படும்.'.